DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 76/2024

PROSECUTION WITNESS No - PW- 5

| | | | |
|---|---|---|---|
| Name : | கலாராணி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2026.

1 வது மற்றும் 2 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரை மாநகர் அண்ணாநகர் காவல் நிலைய குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.02.2022 ல் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் உலகம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளர் இருந்த மாணிக்கம் என்பவர் நிலைய குற்ற எண்.6/2022 ல் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 24.02.2022 ம் தேதி காலை 07.00 மணியளவில் வழக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெள்ளைச்சாமி, பரமசிவம் ஆகியோர்களை சாட்சிகளாக வைத்து சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். மேற்படி நான் தயாரித்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமேன வழக்கின் புகார்தாரரான சார்பு ஆய்வாளர் சேதுராமன், உடனிருந்த காவலர் சரவணன் மற்றும் காவலர் பிராபகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 08.03.2022 ம் தேதி மணலின் மதிப்புக்கேட்டு உதவி பொறியாளர் நீர் வளத்துறை அகிலாதேவி என்பவருக்கு வேண்டுகோள் கடிதம்

கொடுத்து கடந்த 11.03.2022 ல் மணல் மதிப்பு குறித்த சான்று பெற்றேன். மேற்படி சான்றாவணம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றையே தினமே அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 25.08.2022 ல் சிங்கம்புணரி வட்டாசியர் அவர்களிடம் கைப்பற்றிய மணலை ஒப்படைத்து அதற்கான ரசீதை பெற்றேன். மேற்படி ரசீது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றே அவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். இவ்வழக்கில் TN50F3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியை உரிய சொத்து படிவம் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் கனிம வளத்துறையை சார்ந்த அகிலாதேவி, வட்டாச்சியர் கயல்செல்வி, முதல் தகவல் அறிக்கை தயாரித்த மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கில் கடந்த 25.08.2022 ம் தேதியில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயாரித்து உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே இவ்வழக்கில் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மேலும் இவ்வழக்கில் குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகாரை கடந்த 06.04.2022 ல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கையில் தாக்கல் செய்தேன். மேற்படி குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகார் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கு கோப்பு எந்த தேதியில் எத்தனை மணிக்கு என் பார்வைக்கு வந்தது என்றால் கடந்த 24.02.2022 ம் தேதி காலை 06.00 என் பார்வைக்கு எடுத்துக்கொண்டேன். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் உள்ள தூரம் சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார் கடந்த 23.02.2022 ல் இரவு 08.00 மணிக்கு சம்பவம் நடந்ததாகவும் 09.00 மணிக்கு புகார் கொடுத்ததாகவும் கோப்பின் மூலம் தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான்.

அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் எதிரிகளின் பெயர் யார் மூலம் தெரிய வந்தது என்று விளக்கிச்சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சார்பு ஆய்வாளர் மூலம் பெறப்பட்ட புகாரில் புகாருடன் ஆவணங்கள் எதுவும் சேர்ந்து கொடுக்கப்பட்டதாக தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் அ.சா.1 சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன் பணி குறித்து தனியான குறிப்பேடு எதுவும் பராமரிக்கப்பட்டு அது வழக்கு கோப்பில் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அன்றைய தினம் ரோந்து பணியின் போது வேறு எதுவும் குற்ற நடவடிக்கை குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு சம்பந்தப்பட்ட கிராவல் மண் எந்த இடத்தில் எவ்வாறு அள்ளப்பட்டது என்பதற்கான ஆதரம் ஆவணங்கள் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கிராவல் மண் யாருக்கு விற்பணைக்காக கொண்டு செல்லப்பட்டது என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கிராவல் மண் எந்த இடத்தில் எந்த சர்வே எண்ணில் யாருக்கு சொந்தமான பகுதியில் எடுக்கப்பட்டது என்பது குறித்து விசாரணையில் தெளிவாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் புகைப்படங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படங்களில் மண் உள்ளது போன்று தெளிவாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் மண் அள்ளிய சம்பவத்தை பார்த்ததற்கான தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புள்ளி விவர கணக்கிற்காக உயர் அதிகாரிகளின் ஆலோசனையின்படி புள்ளி விவர கணக்கிற்காக தயாரிக்கப்பட்ட

வழக்கிற்கு ஆதரவாக வழக்கை தயாரித்து அதற்கு ஏற்ற வகையில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 16:04:02 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை